செய்தி வெளியீடு எண்:340 நாள்: **28.06.2021**

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களின்வழிகாட்டுதலின்படி, சென்னை மண்டலத்தில் உள்ள திருக்கோயிகளில் பணியாற்றும் பணியாளர்களுக்கான இலவச கொரோனா நோய்த் தடுப்பூசி முகாமை மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. பி.கே.சேகர்பாபு, திருவல்லிக்கேணி சட்டமன்ற உறுப்பினர் திரு. உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார்கள்

சென்னை, புரசைவாக்கம், பெரம்பூர் பேரக்ஸ் ரோடு லட்சுமி மஹாலில் இன்று (28.06.2021) நடைபெற்ற நிகழ்ச்சியில், மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் மற்றும் திருவல்லிக்கேணி சட்டமன்ற உறுப்பினர் திரு. உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் சென்னை I மற்றும் II மண்டலத்தில் உள்ள திருக்கோயில்களில் பணியாற்றும் அனைத்து பணியாளர்களுக்குமான இலவச கொரோனா நோய்த் தடுப்பூசி முகாமைத் தொடங்கி வைத்தார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின் அவர்கள் கொரோனா நோய்த் தொற்று குறைவாக உள்ள சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் ஆகிய நான்கு மாவட்டங்களில் 28.06.2021 முதல் நிலையான வழிகாட்டி முறைகளைப் பின்பற்றி வழிபாட்டு தலங்களைத் திறக்க உத்தரவிட்டுள்ளார்கள். அதன்படி, சென்னை மண்டல திருக்கோயில்களைத் திறக்க ஏதுவாக திருக்கோயிலில் பணியாற்றும் 463 பணியாளர்களுக்கு கொரோனா நோய்த் தொற்று பரிசோதனை செய்யப்பட்டுள்ளது. மேலும், திருக்கோயில்கள் தூய்மையாக பராமரிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இன்று (28.06.2021) சென்னை மண்டலத்தில் உள்ள திருக்கோயில்களில் பணியாற்றும் பணியாளர்களுக்கு

கொரோனா நோய்த் தடுப்பூசி போடப்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் திரு. ஜெ. குமரகுருபரன் இ.ஆ.ப, எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.பரந்தாமன், சென்னை பெருநகர மாநகராட்சி அலுவலர்கள் மற்றும் சுகாதார அலுவலர்கள் கலந்துகொண்டனர். தடுப்பூசி முகாம் சிறப்பாக நடைபெற மண்டல இணை ஆணையர்கள் திருமதி. சி.ஹரிப்ரியா, திருமதி.ரேனுகாதேவி, பகுதி செயலாளர் திரு.வேலு மற்றும் அலுவலர்கள் ஏற்பாடுகளைச் செய்திருந்தனர்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9